**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310 / 2023**

| Deposition of Witness for | Prosecution PW10<br>Defence<br>Court |
|---|---|

| | |
|---|---|
| Name | : Dr. Anurathna |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of August, 2026.

**( Accused is present )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**(சாட்சி காணொளியில் ஆஜர்)**

நேரம் 12.01 மணி

நான் 23-04-2021 அன்று பொன்னேரி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சிவரஞ்சினி என்கிற 21 வயது மதிக்கதக்க பெண்

இரவு 8.00 மணிக்கு பிரசவ வார்டில் வைத்து பரிசோதனை செய்தேன். அவர் தன்னை தெரியாத நபர் 23-04-2021 அன்று மதியம் 3.30 மணியளவில் மலம் கழிக்க வெளியில் சென்றபோது அடையாளம் தெரியாத நபர் அவரை அடித்ததாகவும், ஆடைகளை களைந்து கட்டாயப்படுத்தி பாலியல் வன்புணர்வு செய்ததாகவும் என்னிடம் கூறினார். நான் சிவரஞ்சினியை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தார். சிவரஞ்சினியின் இரண்டு கண்களும் வீங்கி இருந்தது. இடது பக்க கண் நல்ல வீக்கத்தினால் மூடி காணப்பட்டது. வலது புற கண் வீக்கத்துடன் காணப்பட்டது. இடது பக்க கண்ணில் ஏற்பட்ட இடப்பக்க கண்ணிற்கு தையல் காணப்பட்டது. அவரை விசாரித்ததில் இடது பக்க கண்ணிற்கு பழவேற்காடு அரசு மருத்துவமனையில் தையல் போட்டதாக கூறினார். சிவரஞ்சினியின் முகத்தில் கிழிந்த காயங்கள் காணப்பட்டது. உதடுகள் வீங்கி காணப்பட்டது. இரண்டு மார்பகங்களிலும் நகக்கீறல்கள் காணப்பட்டது. அதே போல் புட்டத்திலும், முதுகு பக்கத்திலும் நிறைய சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அடி வயிற்றில் வலி இருப்பதாக என்னிடம் கூறினார். பிறப்பு உறுப்புகளில் வெளிபுற காயங்கள் எதுவும் இல்லை. பிறப்புஉறுப்பிலிருந்து திரவம் வெளிவந்து காணப்பட்டது. அப்போது இருவிரல் பரிசோதனை செய்து பார்த்தபோது கன்னித்திரை கிழிந்திருந்தது. Vaginal swab, Cervical swab, பிறப்புஉறுப்பிலிருக்கும் முடி, சிவரஞ்சினியின் கை விரல் நகங்கள், Smear, ஆகியவற்றை தடய அறிவியல் பரிசோதனைக்காக அன்றைய தினம் அனுப்பி வைத்தேன். அதனுடைய பரிசோதனை முடிவுகளில் விந்துவோ, இரத்தமோ காணப்பட்டவில்லை. சிவரஞ்சினிக்கு நான் வழங்கிய மருத்துவ பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தடயவியல் பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

முதல் விசாரணையில் சிவரஞ்சினியின் பிறப்புஉறுப்பிலிருந்து வெள்ளை நிற திரவம் வெளிவந்தது அதை நான் ஆணின் விந்து என கருதினேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டில் சிவரஞ்சினிக்கு இடது

**கண்ணில் காயம் ஏற்பட்டு தையல் போட்டது நான் இல்லை என்றால் சரிதான். பழவேற்காடு அரசு மருத்துவமனையில் தையல் போட்டதாக அறிக்கையை பார்த்து கூறுகிறேன் என்றால் சரிதான். சிவரஞ்சினிக்கு என்ன நடந்தது என்று அவர் கூறியதை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான்.**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur